நாள்.12.08.2025.
அசல் வழக்கு எண்.62/2023
வா சா.1
பெயர். முகமது யாசின்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கு சொத்து என் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தாயாருக்கு 3 சென்டுகள் ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கீழ்பக்கம் என் தாயாரின் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் மூன்று கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களும் தலா 3 சென்ட் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 28.01.2019 தேதியில் திருக்குறுங்குடி ஜீயர் மடத்தில் இருந்து எனக்கு வழங்கபட்ட அடவோலையில் 3 சென்ட்டிற்கு பதிலாக 3.96 சென்ட் என தவறுதலாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் எனக்கு 3.96 சென்ட் பாத்தியப்பட்டது.

2022ம் ஆண்டில் தவறுதலாக உள்ள அடவோலையை காட்டி புதிதாக 3.96 சென்டிற்கு அடவோலை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 3.96 சென்ட் பாத்தியம். மேற்படி தவறுதலாக உள்ள அடவோலையை வைத்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். தவறுதலாக மீண்டும் அடவோலை ஏற்பட்டதால் மேற்படி விஸ்தீரணத்தை சரி செய்ய வேண்டும் என மடத்தில் இருந்து எனக்கு அறிவிப்பு வந்தது என்றால் சரியல்ல. என்னுடைய இடத்திற்கு மேற்குபுறம் இரண்டு அடி உயரத்தில் 69 அடி நீளத்தில் தென்வடலாக பிரதிவாதி சுவர் கட்டி உள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

பிரதிவாதிக்கு கிழமேல் 11 அடியும் தென்வடலாக 69 அடியும் என உள்ள இடத்திற்கு அடவோலை வழங்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வடக்குதெற்கு 69 அடிகளும், மேற்குகிழக்கு 25 அடிகளும் உள்ளது. அடவோலையில கண்ட இடம் என்வசம் உள்ளதா என மடத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் மூலமாக அளவீடு செய்யபட்டதா என்றால் மடத்தில் இருந்து எனக்கு அளந்து தான் இடம் கொடுத்தார்கள். முந்தைய வழக்கு தீர்ப்பிற்கு பிறகு இந்த பிரதிவாதி அவரது அனுபவ இடத்தை சங்கரபாண்டியன் என்பவருக்கு அனுபவ கிரையம் கொடுத்து அவரது பெயரில் அடவோலையை ஏற்பட்டது என்றால் யார் பெயரிலும் ஏற்படவில்லை.

மேற்படி விவரம் எதிர்வழக்குரையில் தெரிவிக்கபட்ட பிறகும் மடத்தில் சென்று தபசில் இடம் பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை. முந்தைய வழக்கில் ஜீயர் மடம் ஒரு தரப்பாக சேர்க்கபட்டது என்றாலும், தற்போது சேர்க்கபடவில்லை என்பதால் வழக்கு சொத்தை பொறுத்து நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி சொத்தினை பொறுத்து அவர் கிரையம் கொடுத்த காலத்திற்கு பிறகு சங்கரபாண்டியன் அனுபவம் செய்துவரும் நிலையில் இரும்பால் ஆன கேட் அமைக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னுடைய இடத்திற்கும் என் தாயாரின் சகோதர சகோதரிகள் இடத்திற்கு தென்பகுதியில் சங்கரபாண்டியனுக்கு இடம் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய

இடத்திற்கு தென்பக்கம் யாருடைய இடம் உள்ளது என்று விசாரணை செய்துள்ளேனா என்றால் தென்புறம் என்னுடைய இடம் தான் உள்ளது. தென்பக்கம் உள்ள இடம் சங்கரபாண்டியன் என்பவர் கிரையம் பெற்று 15 வருடங்களுக்கு மேல் கல்வேலி அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. என்னுடைய இடத்திற்கு தென்பக்கம் உள்ள இடம் காம்பவுண்ட் அமைக்கபட்டு காலி இடமாக உள்ளது என்றால் சரிதான்.

என் தாயார் இடத்திற்கு வடக்குபக்கம் கிழமேலாக தெரு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய இடத்திற்கும் என் தாயார் இடத்திற்கும் கீழ்பக்கம் யாருடைய இடம் உள்ளது என்றால் நபீஷா என்பவரின் இடம் உள்ளது. மேற்படி நபீஷா எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு சித்தி ஆவார். நபீஷா இடத்திற்கு கீழ்புறம் யாருடைய இடம் உள்ளது செய்யதலி பாத்திமா இடம் உள்ளது. செய்யதலி பாத்திமா எனக்கு என்ன உறவு வேண்டும் என்றால் அத்தை உறவு ஆகும். செய்யதலி பாத்திமா இடத்திற்கு கீழ்புறம் யாருடைய இடம் உள்ளது என்றால் கதிஷா இடம் உள்ளது. கதிஷா என்னுடைய சித்தி ஆவார். மேற்படி 3 நபர்களுக்கும் அடவோலை படி 3 செண்ட் தான் பாத்தியம் என்றாலும், பிரதிவாதி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி நபர்களுக்கு 3.96 செண்ட் பாத்தியம்.

பிரதிவாதி யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. கிரையம் கொடுத்த நபர்கள் எனக்கு உறவு முறை கிடையாது. பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த நபர் எவ்வளவு காலமாக சொத்தினை அனுபவம் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்து இன்றைய தேதியில் நீதிமன்றம் மூலம் அளவீடு செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பிரதிவாதி ஏற்கனவே கிரையம் கொடுத்த விவரங்கள் தெரிந்த பின்பும் பிரதிவாதி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் காரண காரியங்கள் தவறு என்றாலும், வழக்கு சொத்தை பிரதிவாதி அனுபவம் செய்யவில்லை என்றும் சங்கரபாண்டியன் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.08.12 17:06:15 +0530